அய்யம்பேட்டை அருகே கணபதி அக்ரஹாரம் திரௌபதி அம்மன் கோயில் திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் தீமிதித்து நேர்த்திக் கடன் செலுத்தினர்.

நாளை மின் தடை அறிவிப்பு

■ தஞ்சாவூர், மே 6-

தஞ்சை அருகே மாரியம்மன்கோவில் பகுதியில் நாளை மின் வினியோகம் இருக்காது என்று உதவி செயற்பொறியாளர் நல்லையன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:தஞ்சை அருகே மாரியம்மன்கோவில் துணை மின்நிலையத்தில் நாளை (7ம் தேதி) மாதாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. எனவே காலை 9 முதல் மாலை 5 மணி வரை மாரியம்மன் கோவில், ஞானம் நகர், தளவாய்பாளயம். மகேஷ் நகர், புதுப்பட்டினம், பைபாஸ், சித்தர்காடு, கடகடப்பை, களக்குடி, ஆலங்குடி, நெட்டாநல்லூர், நெல்லி தோப்பு, காந்தாவனம், குளிச்சப்பட்டு, அன்னை இந்திரா நகர், பனங்காடு, கோரிகுளம் புதுத்தெரு, பாரதிதாசன் நகர், தில்லை நகர், எடவாக்குடி, கீழ வஸ்தாசாவடி, அம்மாகுளம், சந்தானம் நகர், வெங்கடேஸ்வரா நகர், ஆனந்த் நகர் பரிசுத்தம் ஜேம்ஸ் நகர், சூரக்கோட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மின் வினியோகம் இருக்காது. இவ் வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பூதலூர் பகுதியில் 8ம் தேதி மின் தடை

■ பூதலூர், மே 6-

வீரமரசன்பேட்டை துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடப்பதால் வரும் 8 ம் தேதி மின் நிறுத்தம் செய்யப்படுகிறது. பூதலூர் அருகே வீரமரசன்பேட்டை துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடக்க உள்ளதால் வரும்8ம் தேதி காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் வினியோகம் பெறும் பூதலூர், செல்லப்பன்பேட்டை, மருதக்குடி, புதுக்குடி, ஆவாரம்பட்டி, முத்துவீரகண்டியன் பட்டி, வெண்டையம்பட்டி, நந்தவனப்பட்டி, அயனாவரம், இந்தலூர், சோழகம்பட்டி, ஓரத்தூர், பூதராயநல்லூர், சாமிநாதபுரம், சிவசாமிபுரம், முல்லைக்குடி, தீட்ச சமுத்திரம், தொண்டராயன் பாடி, ஆற்காடு, சித்திரக்குடி உள்ளிட்ட பகுதிகளில் மின்வினியோகம் இருக்காது.இத்தகவலை தஞ்சாவூர் தமிழ்நாடு மின் பகிர்மான கழக இயக்குதலும், பராமரித்தலும் உதவி செயற்பொறியாளர் பாலகுமார் தெரிவித்துள்ளார்.

வணிகர்கள் தின கடையடைப்பு

■ திருக்காட்டுப்பள்ளி, மே 6-

திருக்காட்டுப்பள்ளியில் அனைத்து கடைகளும் முழு கடையடைப்பு நடந்தது .திருக்காட்டுப்பள்ளியில் அனைத்து வணிகர்கள் கூட்டமைப்பு சார்பில் நேற்று திருவாரூரில் நடந்த 43 வது வணிகர்கள் விழிப்புணர்வு எழுச்சி மாநாட்டிற்காக கூட்டமைப்பின் தலைவர் சுந்தரமூர்த்தி தலைமையில் அனைத்து வணிகர்களும் சென்றதால் நேற்று காலை முதலே அனைத்து கடைகளும் மூடப்பட்டது. முழு விடுமுறை அளிக்கப்பட்டதால் அனைத்து இடங்களும் வெறிச்சோடி காணப்பட்டது.மேலும் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது.

இளைஞர் பெருமன்ற விழா

■ வலங்கைமான், மே 6-

வலங்கைமானில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற 67வது அமைப்பு தின நாள் ஒன்றிய தலைவர் லெனின் தலைமையில் நடந்தது. ஒன்றிய செயலாளர் சுதாகர், துணைத்தலைவர்கள் லெனின் ராஜ், பாண்டியராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய செயலாளர் செந்தில்குமார் அமைப்பு தின கொடியேற்றி பேசினார்.நிகழ்ச்சியில் விவசாய சங்க ஒன்றிய செயலாளர் சின்னராசா, ஒன்றிய குழு உறுப்பினர்கள் தேசிங்கு, பாக்கியராஜ், வேம்பையன், கலிய பெருமாள், ஷங்கர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பணியின்போது விபத்தில் இறந்த இஎஸ்ஐ காப்பீட்டாளரின் குடும்பத்துக்கு வாழ்நாள் ஓய்வூதியத்தை கும்பகோணம் இஎஸ்ஐ கிளை அலுவலக மேலாளர் ருத்ராபதி வழங்கினார்.

மாணவ, மாணவிகளுக்கான பாடப்புத்தகங்கள், சீருடைகள்

குடந்தை கல்வி மாவட்ட பள்ளிகளுக்கு அனுப்பி வைப்பு

■ கும்பகோணம், மே 6-

குடந்தை கல்வி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பாட புத்தகங்கள், நோட்டுகள், சீருடைகள் வழங்க லாரிகளில் அனுப்பும் பணியை முதன்மைக்கல்வி அலுவலர் பேபி பார்வையிட்டார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் மாநில பாடத்திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் மாணவர்களுக்கு பாடபுத்தகங்கள், நோட்டுகள், சீருடைகள் மற்றும் அனைத்து பொருட்களும் வழங்கப்படுகிறது. இந்நிலையில் நடப்பாண்டு கோடை விடுமுறை முடிந்து ஜூன் 1ம் தேதி பள்ளிகள் திறக்க பள்ளிக் கல்வித்துறை முடிவெடுத்துள்ளது.

குடந்தை கல்வி மாவட்ட அலுவலகத்தில் இருந்து அரசு பள்ளிகளுக்கு சீருடைகள் அனுப்பும் பணியை முதன்மை கல்வி அலுவலர் பேபி பார்வையிட்டார்.

அதனால் பள்ளிகள் திறந்தவுடன் மாணவ, மாணவிகளுக்கு பாடபுத்தகங்கள், நோட்டுகள், சீருடைகள் வழங்க முடிவு செய்யப்பட்டு, அந்தந்த மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மூலமாக அனுப்பி வைக்கப்படுகிறது.

அதன்படி நேற்று (5ம் தேதி) குடந்தை கல்வி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு புத்தகங்கள் ,சீருடைகள் அனுப்பி வைக்கும் பணிகள் தொடங்கியது. இப்பணியை முதன்மை கல்வி அலுவலர் பேபி பார்வையிட்டார். குடந்தை கல்வி மாவட்ட அலுவலர் சுந்தர், அலுவலக கண்காணிப்பாளர் சகாயராஜன் மற்றும் கல்வித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

இதுபற்றி கல்வி மாவட்ட அலுவலர்கள் கூறியதாவது: குடந்தை கல்வி மாவட்டத்தில் 94 அரசு , அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளிகள் உள்ளது. இப் பள்ளிகளில் 54 ஆயிரம் மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள்.இந்நிலையில்

கோடை விடுமுறை முடிந்து பள்ளி திறக்கும் நாளில் மாணவ, மாணவிகளுக்கு பாட புத்தகங்கள் மற்றும் விலையில்லா நோட்டுகள் சீருடைகள் வழங்குவதற்கு வசதியாக பள்ளிகளுக்கு அனுப்பும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

அதேபோல் 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு மாணவ, மாணவிகள் 20 ஆயிரத்து 303 பேருக்கு சீருடை வழங்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றனர்.

தஞ்சை கல்லணைக்கால்வாய் ஆற்றில் ரூ.6 கோடியில் கான்கிரீட் தளம் அமைப்பு

■ தஞ்சாவூர், மே 6-

ரூ.6 கோடி மதிப்பில் கல்லணை கால்வாயில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணிகள் தொடங்கி உள்ளன.

கல்லணை கால்வாய் ஆற்றில் கல்லணையிலிருந்து பேராவூரணி வரை கான்கிரீட் தளம் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இதில் தஞ்சை பகுதியில் கடந்தாண்டு பணிகள் நடந்த நிலையில் மேட்டூர் அணை திறக்கப்பட்டு தண்ணீர் வந்ததால் இடை நிறுத்தப்பட்டது. இப்போது மேட்டூர் அணையிலிருந்து நீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டு விட்டதால் மீதம் உள்ள பணிகள் உடனடியாக முடிக்க கல்லணை கால்வாய் கோட்ட அதிகாரிகள் துரிதப்படுத்தி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக தஞ்சை இர்வின் பாலத்திலிருந்து நாகை ரயில்வே பாலம் கீழ்பகுதி வரை ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்துக்கு ஆற்றின் தரைப்பகுதியில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணிகளும், கரையோர சுவரில் சறுக்கை அமைக்கும் பணிகளும் தொடங்கி நடந்து வருகின்றன. இதற்காக ஆற்றின் தரைப்பகுதியை சமப்படுத்தி வருகின்றனர். இந்த பணிகள் சுமார் ரூ.6 கோடி மதிப்பில் நடந்து வருகிறது. காகிரீட் தளம் அமைக்கும் பணிகளும், சறுக்கை அமைக்கும் பணிகளும் மேட்டூர் அணையிலிருந்து நீர் திறக்கும் முன்பு முடிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தஞ்சை இர்வின் பாலம் அருகே கல்லணை கால்வாய் ஆற்றில் தரை பகுதியில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணிக்காக தரையை சமப்படுத்தும் பணிகள் நடக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு தொகுதியில் கூட வெற்றிபெறாத அதிமுக கூட்டணி: கட்சியினர் கலக்கம்

■ தஞ்சாவூர், மே 6-

தஞ்சை மாவட்டத்தில் ஒரு தொகுதியில் கூட அதிமுக கூட்டணி வெற்றிப் பெறாதது அந்த கூட்டணி கட்சியினரிடையே கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம், திருவிடைமருதூர், ஓரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி ஆகிய தொகுதிகளில் அதிமுகவும், தஞ்சை தொகுதியில் பாஜ, திருவையாறு தொகுதியில் அமமுக, கும்பகோணம் தொகுதியில் தமாகாவும் போட்டியிட்டன.

காவிரி டெல்டா மாவட்டங்களை வேளாண் பாதுகாப்பு மண்டலங்களாக முதல்வராக இருந்தபோது பழனிசாமி அறிவித்தார். மேலும் கஜா புயல் உள்ளிட்ட இயற்கை சீற்றங்களின்போது காவிரி டெல்டா மாவட்டங்களில் பழனிசாமி நேரடியாக சென்று பார்வையிட்டு விவசாயிகளுக்கு அரணாக செயல்பட்டார். மேலும் தேர்தல் அறிக்கையில் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய பயிர் கடன் தள்ளுபடி செய்யப்படும் என தெரிவித்திருந்தார். பழனிசாமி பிரச்சாரம் செய்த இடங்களில் எல்லாம் பயிர் கடன் தள்ளுபடி என்பதை மறக்காமல் பிரச்சாரம் செய்தார். இதனால் இந்த முறை தஞ்சை மாவட்டத்தில் அப்படியே 8 தொகுதிகளையும் அள்ள முடியவில்லை என்றாலும் கூட, பாதிக்கு பாதியாக 4 தொகுதிகளில் வெற்றிப் பெற்றுவிடலாம் என்று அதிமுக கூட்டணி கட்சியினர் பெரிதும் நம்பியிருந்தனர். ஆனால் தஞ்சை மாவட்டத்தில் 2 தொகுதிகளில் தவெகவும், 6 தொகுதிகளில் திமுக கூட்டணியும் வெற்றிப் பெற்று அதிமுகவுக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

திருவாரூரில் நேற்று நடந்த வணிகர் தின மாநாட்டை ஒட்டி திருக்காட்டுப்பள்ளியில் அனைத்து கடைகளும் மூடப்பட்டதால் கடைவீதி வெறிச்சோடி காணப்பட்டது.

பேராவூரணி தொகுதியில் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் அசோக்குமாரிடம் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் கலியமூர்த்தி வழங்கினார். அருகில் தஞ்சை தெற்கு மாவட்ட பொறுப்பாளர் பழனிவேல் மற்றும் பலர்.

வாலிபருக்கு வெட்டு: 4 பேர் மீது வழக்கு

■ திருக்காட்டுப்பள்ளி, மே 6-

திருக்காட்டுப்பள்ளி அருகே செந்தலை தேரடித் தெருவை சேர்ந்தவர் ஜெய்சங்கர் மகன் ஸ்ரீ ஹரி (28). இவர் தேர்தல்அறிவிப்புகளில் தவெக முன்னிலை பெற்று வரும் நிலையில் செந்தலை தேரடி பிள்ளையார் கோயில் அருகே வெடி வெடித்துக் கொண்டாடினாராம். இதில் ஆத்திரம் அடைந்த அதே தெருவைச் சேர்த்த தங்கம் மகன் சண்முகம்(45),என்பவர் அரிவாளால் ஸ்ரீஹரியை வெட்ட முயன்றதில் ஸ்ரீஹரிக்கு வலது கையில் காயம் ஏற்பட்டதாம். அதே தெருவை சேர்ந்த சண்முகம் மகன் சந்தோஷ் (23), மீனாட்சிசுந்தரம் மகன் செல்வகுமார் (40),சுப்பிரமணியன் மகன் குமார் (50) ஆகியோரும் ஸ்ரீஹரியை தாக்கினராம். இதில் காயமடைந்த ஸ்ரீஹரியை அவரது நண்பர்கள் சூர்யா மற்றும் மாதவன் மீட்டு திருக்காட்டுப்பள்ளி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை அளித்தனர். இதுகுறித்து திருக்காட்டுப்பள்ளி போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சூர்யா விசாரணை நடத்தி வருகிறார்.

சாலை விபத்தில் இறந்தவர் குடும்பத்துக்கு இஎஸ்ஐ வாழ்நாள் ஓய்வூதியம் வழங்கல்

■ தஞ்சாவூர், மே 6-

மயிலாடுதுறையில் பணி முடிந்து வீட்டுக்கு செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் இறந்த ஊழியரின் குடும்பத்துக்கு இஎஸ்ஐ வாழ்நாள் ஓய்வூதியம் வழங்கியது.

இஎஸ்ஐ காப்பீட்டாளர்களுக்கு தொழில்சார் நோய் அல்லது வேலை காரணமாக இறப்பு நிகழும் போது, இறந்த காப்பீட்டாளரின் ஊதியத்தில் 90 சதவீதம் சார்ந்தோர் உதவி தொகையாக இஎஸ்ஐ கழகத்தினால் இறந்தவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு மாதா மாதம் வழங்கப்படுகிறது. அதன் அடிப்படையில் மயிலாடுதுறையில் உள்ள முகில் மேன்பவர் நிறுவனத்தில் இஎஸ்ஐ காப்பீட்டாளர் மகாலிங்கம் குப்புசாமி என்பவர் தற்காலிக ஒப்பந்த துாய்மை பணியாளராக பணியாற்றினார். இவர் சாலை விபத்தில் காயமடைந்து கடந்த 2025 நவம்பர் 17ம் தேதி இறந்தார். இதையடுத்து அவரது குடும்பத்திற்கு சார்ந்தோர் உதவி தொகையாக மாதா மாதம் ரூ.3 ஆயிரத்து 627ஐ வழங்க இஎஸ்ஐ சேலம் துணை மண்டல அலுவலக இயக்குனர் (பொ) சிவராமகிருஷ்ணன் உத்தரவிட்டார். இதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு கும்பகோணம் இஎஸ்ஐ கிளை அலுவலகத்தில் கிளை அலுவலக மேலாளர் ருத்ராபதி, இறந்தவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு முகில் மேன்பவரின் மேலாளர் சபரிராஜா முன்னிலையில் உதவி தொகையை வழங்கினார்.

நாள்தோறும் மலரும் தின மலர் உங்கள் இல்லம் தேடி வர -: தொடர்புக்கு :- Cell: 98948 80600 (காலை 10.00 - மாலை 5.00 மணி) E.mail: circulationdmrtry@gmail.com

பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda
மெலட்டூர் கிளை
நெ. 26, சாலை தெரு, மெலட்டூர், பாபநாசம்-TK தஞ்சாவூர் - 614 301. போன் : 04374-273432
e-mail : melatt@bankofbaroda.bank.co.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-Aயின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : 1) திருமதி. K.S.சித்ரா, க/பெ. சுரேஷ்குமார், நெ. 2034, வனதுர்கா நகர், மனோஜ்பட்டி, தஞ்சாவூர் தாலுக்கா, தஞ்சாவூர் - 613004. (2) திரு. B.சுரேஷ்குமார், த/பெ. பாலு, நெ. 2034, வனதுர்காநகர், மனோஜ் பட்டி, தஞ்சாவூர் தாலுக்கா, தஞ்சாவூர்-613004.

Term-Loan A/c.No.**05370600017254,** நிலுவை தொகை ரூ.**24,23,868.05/-** மேலும் **30.04.2026** அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

சொத்து : தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் பதிவு மாவட்டம், கரந்தட்டாங்குடி சார் பதிவு, தஞ்சாவூர் தாலுக்கா, ராமநாதபுரம் வட்டம் மற்றும் கிராமம், மனை எண்.36, கிழக்கு மேற்கு 60 அடி மற்றும் தெற்கு வடக்கு 40 அடி. இதன் மொத்த பரப்பளவு 2400 சதுர அடி. (அல்லது 223.05 சதுர மீட்டர்). அமிர்தம் நகர் மனை சர்வே நெ.435/1A, மற்றும் தற்போது UDRபடி சர்வே நெ.435/4. ராமநாதபுரம் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட கட்டுமானத்தில் உள்ள கட்டிடம் உட்பட. **நான்கு எல்லைகள் :** 20 அடி அகல பொது பாதை வழிக்கு கிழக்கே, மனை எண் 35க்கு வடக்கே, மனை எண் 37ன் மதில் சுவருக்கு தெற்கே, மனை எண் 17ன் மதில் சுவருக்கு மேற்கே.

சுவாதீன நிலை : ஆக்கப்பூர்வ நிலை

நிர்ணயிக்கப்பட்ட விலை	ரூ. 30,00,000/-	டேவணித் தொகை	ரூ. 3,00,000/-	ஏல உயர்வு தொகை	ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் **12.06.2026** அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 25.05.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 11.06.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.bank.in/e-auction என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி போன்: 04374-273432 செல் : 9585321133 / 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 05.05.2026
இடம் : தஞ்சாவூர்

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/
பேங்க் ஆஃப் பரோடா